## தலைப்பு 024 – தேசிய கொள்வனவு ஆணைக்குழு

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கொள்வனவு ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 மே 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, இந் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் பிரமான கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் அடங்லான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 3,487,279 ஆன போதிலும், நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 3,014,879 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக முற்பணப் பெறுவனவுகள் ரூபா 472,400 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | அனைத்து முற்பணப் பெறுவனவுகளும் செயலற்றல் கூற்றில் குறிப்பிடப்படுவது அவசியமானது ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திறைசேரியின் கணினி அச்சீடு (SA 52) மற்றும் மாதிரிப் படிவம் இலக்கம் ஏசீஏ – 5 இன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் முற்பண செலுத்தல்கள் ரூபா 2,515,056 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும்ூ இதன் காரணமாக முற்பண செலுத்தல்கள் ரூபா 247,400 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | அனைத்து முற்பணப் பெறுவனவுகளும் செயலற்றல் கூற்றில் குறிப்பிடப்படுவது அவசியமானது ஆகும். |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரியின் கணினி அச்சீடு (SA 52) மற்றும் மாதிரிப் படிவம் இலக்கம் ஏசீஏ – 5 இன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் முற்பணக் கணக்கின் மீதி ரூபா 2,315,633 ஆன போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் முற்பணக் கணக்கின் மீதி ரூபா 2,123,133 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக முற்பணக் கணக்கின் மீதி ரூபா 192,500 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | முற்பண கணக்கின் மீதி திறைசேரி புத்தகத்தின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் பதிவு செய்யும் தேவைப்பாடு. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக தீர்ப்பனவு செய்யப்படாத கட்டுநிதி மீதி ரூபா 1,222,837 ஆன போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் அது தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | கட்டுநிதி மீதி திறைசேரி புத்தகத்தின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் பதிவு செய்யும் தேவைப்பாடு. |

**1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் திறைசேரியிலிருந்தான கட்டுநிதி பெறுவனவுகள் மீதி ரூபா 74,360,000 ஆன போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான கட்டுநிதி பெறுவனவு ரூபா 79,655,747 ஆக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் திறைசேரியின் கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா 5,295,747 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | வழிகாட்டிகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு. |
| (ஆ) | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் ஆண்டினுள் பெறப்பட்ட வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 4,207,050 ஆன போதிலும், செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | வருமானமல்லாத பெறுவனவுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய தேவைப்பாடு. |
| (இ) | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் ஆண்டினுள் பெறப்பட்ட முற்பண அறவிடல்கள் ரூபா 2,131,103 ஆன போதிலும், அது முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான | -மேற்படி- | முற்பண அறவீடுகளின் மொத்த பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கும் |

| | | | |
|---|---|---|---|
| | காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்காமையால் காசு உட்பாய்ச்சல் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | தேவைப்பாடு. |
| (ஈ) | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் ஆண்டினுள் முற்பண அறவீடுகள் ரூபா 2,131,013 ஆன போதிலும், ஆன போதிலும், அது முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்காமையால் காசு உட்பாய்ச்சல் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | முற்பண அறவீடுகளின் மொத்த பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கும் தேவைப்பாடு. |
| (உ) | திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் ஆண்டினுள் முற்பண செலுத்தல்கள் ரூபா 2,267,656 ஆன போதிலும், ஆன போதிலும், அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,225,250 இனால் காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 1,042,406 இனால் காசு உட்பாய்ச்சல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | முற்பண செலுத்தல்களின் மொத்த பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கும் தேவைப்பாடு. |

### 1.6.4 கட்டுநிதி சீராக்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் புத்தகங்கள் மற்றும் திறைசேரியின் புத்தகங்கள் பிராகரம், முற்பணப் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளுக்கிடையே ரூபா 1,108,776 ஆன வேறுபாடு காணப்பட்ட போதிலும், அது கட்டுநிதி சீராக்கல் கணக்கிற்கு ரூபா 883,776 ஆக சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | இணங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | வழிகாட்டல்களின் பிராகரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு மூலதன செலவின விடயங்களின் ரூபா 200,000 மொத்த தேறிய நிதியேற்பாடும் செலவிடப்படாது சேமிக்கப்பட்டது. | கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக அலுவலகப் பணிகளுக்கான கட்டுப்பாடுகள் காரணமாக தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை வாங்குவது ஒத்திவைக்கப்பட்டது, பின்னர் அதை ரத்து செய்ய ஆணைக்குழு முடிவு செய்ததால் கொள்வனவு பணிகள் நிறுத்தப்பட்டது. | மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாட்டை உச்ச அளவில் பயன்படுத்துத நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவைப்பாடு. |

### 2.2 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திறைசேரியின் கணினி அச்சீடு (SA 52) மற்றும் ஏ.சி.ஏ - 5 மாதிரியின் பிரகாரம் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் முற்பண கணக்கின் மீதி ரூபா 2,315,633 ஆகும். எனினும் இதனை திணைக்களத்தில் புத்தகங்கள் மற்றும் திறைசேரியின் கணினி அச்சிட்டு பதிவுகளை இணக்கம் செய்வதற்கான கூற்று (நி.பி. 427(1)) பிரகாரம் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான மீதி 2,540,633 ஆகும். | ஏற்றுக்கொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரமான மீதியை சரியாக பதிவு செய்வதன் தேவைப்பாடு |

| | | | |
|---|---|---|---|
| | அதன் பிரகாரம் ரூபா 225,000 ஆன வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | திறைசேரியின் கணினி அச்சீடு (SA 52) பிரகாரம் 8493-0-0-024-0-12-0 (குறுக்குப் பதிவு) ஆண்டினுள்ளான செலவு வைத்தல்கள் ரூபா 2,398,582 ஆகும். எனினும் திணைக்களத்தில் புத்தகங்கள் மற்றும் திறைசேரியின் கணினி அச்சிட்டு பதிவுகளை இணக்கம் செய்வதற்கான கூற்று (நி.பி. 427(1)) பிரகாரம் திறைசேரி கணினி அச்சீட்டின் ஆண்டினுள்ளான குறுக்கு பதிவுகள் மூலம் வரவு வைத்தல்கள் ரூபா 2,173,582 ஆகும். அதன் பிரகாரம் 225,000 ஆன வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | திறைசேரியின் கணினி அச்சீடு (SA 52) மற்றும் ஏ.சி.ஏ - 5 மாதிரியின் பிரகாரம் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான திறைசேரியின் புத்தகங்களின் பிரகாரம் முற்பண கணக்கின் மீதி ரூபா 2,315,633 ஆன போதிலும், தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் பிரகாரம் தனிப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,540,633 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 225,000 ஆன வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

## 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 மூலதன செலவினம விடயங்கள் தொடர்பில் ரூபா 48,892 பெறுமதியான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் (iii) இல் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் அனைத்து பொறுப்புகளும் வெளிப்படுத்தப்பட வேண்டியமை. |
| (ஆ) | திறைசேரியின் கணினி அச்சிட்டு பதிவு (SA 92) பிரகாரம் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான திணைக்களத்தின் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் என குறிப்பிடப்பட்டிருந்த 02 உருப்படிகளில் பெறுமதி மற்றும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு (iii) இல் காண்பிக்கப் பட்டுள்ள பெறுமதி ஆகியவற்றுக்கு இடையே ரூபா 59,780 ஆன வேறுபாடு நிலவியது. | -மேற்படி- | -மேற்படி- |